தினமணி

**மக்காச் சோளத்துக்கு நல்ல விலை கிடைக்கும்**

First Published : 07 Jun 2011 03:55:48 PM IST

திண்டுக்கல், ஜூன் 6: ஜூலை முதல் ஆகஸ்டு வரை அறுவடையாகும் மக்காச் சோளத்துக்கு நல்ல விலை கிடைக்கும் என திண்டுக்கல் வேளாண் துணை இயக்குநர் (வணிகம்) கு.ரா. சாரநாத்பாபு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மக்காச் சோளம் கோழிப் பண்ணைகளில் தீவனமாகவும், மாவுத் தொழிற்சாலைகளில் மூலப் பொருளாகவும், உயிர் எரிபொருள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. பல்வேறு வகை பயன்பாடுகளால் இதன் தேவை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. சர்வதேச சந்தைகளில் விலை உயர்வு, அதிக உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி தேவை, சீன நாடு அதிகளவில் மக்காச் சோளத்தை இறக்குமதி செய்வது, அமெரிக்காவில் மக்காச் சோளம் எத்தனால் உற்பத்திக்குப் பயன்படுத்துவது ஆகிய காரணங்களினால் இதன் விலை 2010-11 ஆம் ஆண்டில் ஏறுமுகமாகவே இருந்து வருகிறது.

மேலும், மக்காச் சோளத்தின் தேவை ஆண்டுக்கு 20 சதவீதம் என்ற அளவில் அதிகரித்தும் வருகிறது.

இந் நிலையில், கோவை வேளாண் பல்கலைக் கழகத்தில் இயங்கிவரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைத் தகவல் மையம் சித்திரை பட்டத்தில் சாகுபடி செய்யப்படும் மக்காச் சோளத்துக்கான விலை முன்னறிவிப்பை சந்தை நிலவரங்களை ஆய்வு செய்து வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஜூலை முதல் ஆகஸ்டு வரையிலான காலத்தில் அறுவடையாகும் மக்காச் சோளம் குவிண்டாலுக்கு ரூ.1,200 முதல் ரூ.1,350 வரை விலை கிடைக்கும். ஏற்றுமதி தடை செய்யப்பட்டால் சற்று விலை குறைய வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தச் சமயத்தில் அறுவடையாகும் மக்காச் சோளத்தின் மகசூல் 70 முதல் 80 சதவீத அளவில் இருக்கும்.

மேலும், மக்காச் சோளப் பயிரைத் தாக்கும் அடிச்சாம்பல் நோயினைத் தடுக்க ஒரு கிலோ விதைக்கு 6 கிராம் மெட்டலாக்சில் அல்லது ரிடோமில் உபயோகித்து விதை நேர்த்தி செய்து விதைக்கப் பரிந்துரைப்பதாக வேளாண் வணிக துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**வெல்லம் விலை வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை**

First Published : 07 Jun 2011 02:26:16 PM IST

பரமத்தி வேலூர், ஜூன் 6: பரமத்தி வேலூர் தாலுகா, பிலிக்கல்பாளையம் வெல்ல மார்க்கெட்டில் வெல்லம் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் தாலுகா சோழசிராமணி, ஜேடர்பாளையம், பிலிக்கல்பாளையம், கொத்தமங்கலம், அய்யம்பாளையம், ஆனங்கூர், கபிலர்மலை பகுதிகளில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் கரும்பு பயிரிடப்படுகிறது.

அறுவடை செய்யப்படும் கரும்பை கொத்தமங்கலம், சிறுநல்லிகோவில், ஆனங்கூர், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம் பகுதி கரும்பு ஆலைகளுக்கு எடுத்துச் சென்று உருண்டை மற்றும் அச்சு வெல்லம் தயாரிக்கின்றனர் விவசாயிகள்.

பின்னர் அவற்றை 30 கிலோ கொண்ட சிப்பங்களாக கட்டி, பிலிக்கல்பாளையம் வெல்ல மார்க்கெட்டுக்கு விவசாயிகள் கொண்டுவருகின்றனர்.

இந்த வெல்லத்தை ஏலம் எடுக்க மதுரை, சேலம், ஈரோடு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வருவர். ஏலம் எடுத்த வெல்லத்தை ஆந்திரம், உத்ராஞ்சல், மகாராஷ்டிரம், கேரளம் போன்ற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இப்போது, பிலிக்கல்பாளையம் வெல்ல மார்க்கெட்டுக்கு ஏலம் எடுக்க வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. தேவையான கரும்பு உற்பத்தியும் இல்லை. எனவே, வெல்லம் விலை குறைந்துள்ளது.

கரும்பின் விலையும் டன்னுக்கு ரூ.200 குறைந்து, ரூ.1600-க்கு விற்பனையாகிறது. சில வாரங்களுக்கு முன் உருண்டை வெல்லம் சிப்பம் (30 கிலோ) ஒன்று ரூ.850-க்கும், அச்சு வெல்லம் ரூ.880-க்கும் ஏலம் போனது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் உருண்டை வெல்லம் ரூ.800-க்கும், அச்சு வெல்லம் ரூ.780-க்கும் ஏலம் போனது. அதாவது, உருண்டை வெல்ல சிப்பத்துக்கு ரூ.50-ம், அச்சு வெல்ல சிப்பத்துக்கு ரூ.100-ம் குறைந்துள்ளது. இதனால் கரும்பு விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**விவசாயத்திற்கு தனி பட்ஜெட்: விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

First Published : 07 Jun 2011 03:28:16 PM IST

குடியாத்தம், ஜூன் 6: விவசாயத்திற்கு தனி பட்ஜெட் சமர்ப்பிக்க வேண்டும் என தமிழக அரசை தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அச்சங்கத்தின் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் குடியாத்தத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. வேலூர் கிழக்கு மாவட்டத் தலைவர் டி.சி.ஜெகன்நாதன் தலைமை வகித்தார்.

தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை விவசாயப் பணிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும். அதிமுக தேர்தல் வாக்குறுதிப்படி கரும்புக்கு டன்னுக்கு ரூ. 2500 நடப்பு பருவத்திலேயே வழங்க வேண்டும். மணல் கொள்ளையைத் தடுக்க அமைக்கப்படும் கண்காணிப்புக் குழுக்களில் விவசாயிகள் சங்க பிரதிநிதிகளையும் நியமிக்க வேண்டும்.

தோல் கழிவுநீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், வன விலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் உடனடி நிவாரணத் தொகை வழங்க வேண்டும். தமிழக விவசாயிகள் சங்க முன்னாள் தலைவர் நாராயணசாமி நாயுடுவுக்கு மணிமண்டபம் கட்ட தமிழக முதல்வரை கேட்டுக் கொள்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநிலத் தலைவர் கே.வெங்கடாசலம், மாநில துணைத் தலைவர் ஆர்.பாலாஜி, மாநில கொள்கை பரப்புச் செயலர் கே.எம். நந்தகோபால், மேற்கு மாவட்டத் தலைவர் ஆனந்தகுமார், மாவட்டச் செயலர் மார்கபந்து கவுண்டர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**பயறுவகைப் பயிர்களுக்கு மானாவாரி ஊட்டமேற்றிய தொழு உரம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,00:00 IST



மானாவாரி நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் தற்போதே ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்கும் பணியை துவங்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 4 கிலோ மணிச்சத்து தரக்கூடிய 25 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை 300 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து மூட்டம் போட்டு வைக்க வேண்டும்.

15 நாட்கள் கழித்து கிளறிவிட்டு மீண்டும் மூட்டம் போடவேண்டும். இதன் மூலம் கிட்டா நிலையில் உள்ள மணிச்சத்துக்கள் பயிருக்கு கிட்டும் நிலைக்கு வரும். ஒரு மாதம் முடிந்து மானாவாரி நிலக்கடலை விதைக்கும்போது இந்த உரக்கலவையுடன் 9 கிலோ யூரியா மற்றும் 30 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை கலந்து விதைப்பு சாலில் இடவேண்டும்.

ஊட்டமேற்றிய தொழு உரம் இடுவதால் நிலக்கடலை மகசூல் அதிகரிப்பதுடன் மண்ணின் வளமும், ஈரத்தன்மையும் பாதுகாக்கப்படும். வறட்சியை தாங்கி வளரும் தன்மை பயிருக்கு கிடைக்கும். நிலக்கடலை பயிரின் வேர் வளர்ச்சி அதிகரிக்கும்.

விழுதுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து கூடுதல் மகசூல் பெறமுடியும். வைகாசி பட்டத்தில் நிலக்கடலை விதைப்பு மழை பெறப்பட்டவுடன் துவங்கும். எனவே, தற்போதே ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட வேண்டும். ஒரு மாதம் மூட்டம் போட்டு வைத்திருந்தால் மட்டுமே முழு பயன்பெற முடியும்.

கோடை மழையை பயன்படுத்தி மானாவாரியில் பயறுவகைப் பயிர்களான துவரை, உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு ஆகிய பயிர்களை விதைக்க தயாராகவுள்ள விவசாயிகள் ஊட்டமேற்றிய தொழு உரத்தினை அடி உரமாக இடவேண்டும்.

கடைசி உழவில் ஏக்கருக்கு ஐந்து டன் தொழு உரம் இட்டு மானாவாரியில் பயிர்சாகுபடி செய்யும் வழக்கம் மறைந்து வெகு காலம் ஆகிவிட்டது. ஏனெனில் தொழு உரம் அதிகமாக தயாரிப்பது என்பது எட்டாக் கனியாகிவிட்டது. இருப்பினும் மானாவாரியில் சாகுபடி செய்யும் பயிர்கள் வறட்சியைத் தாங்கி வளரவும், அதிக மகசூல் கொடுக்க தேவையான சத்துக்களை அடியுரமிடுவதும் அவசியமான ஒன்றாகும்.

எனவே தற்பொழுது கிடைக்கக்கூடிய குறைந்த தொழு உரத்துடன் பயிர்களுக்கு தேவைப்படும் சத்துக்களை தரும் ரசாயன?உரங்களை கலந்து ஊட்டமேற்றிய தொழு உரமாக தயாரித்து இடவேண்டும்.

ஒரு ஏக்கர் பயறுவகைப் பயிர்களுக்கு அடியுரமிட குறைந்தபட்சம் ஒரு வண்டி மக்கிய தொழு உரத்துடன் 62.5 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை நன்கு கலந்து மேடான இடத்தில் குவித்து வைத்து, காற்று புகாவண்ணம் சேறு பூசி மூட்டம்போட்டு வைக்க வேண்டும்.

மக்கிய தொழு உரத்துடன் கலந்துள்ள சூப்பர் பாஸ்பேட் உரமானது வேகவைத்த உணவு போல் நன்கு மக்கிய ஊட்டமேற்றிய தொழு உரமாக மாறுகிறது. இந்த ஊட்டமேற்றிய தொழு உரத்துடன் ஏக்கருக்கு 12 கிலோ யூரியா கலந்து பயறுவகை விதைக்கும் முன் விதைப்பு சாலில் சீராக இடவேண்டும். இவ்வாறு அடியுரமாக இடுவதால் மானாவாரியில் பயிரிடப்பட்டுள்ள

பயிர்களை சுடாமல் காப்பதுடன், அதிக வேர்கள் வளர்ந்து மண்ணில் உள்ள ஈரத்தை பயிர்களுக்கு எடுத்துக் கொடுப்பதால் வறட்சியைத் தாங்கி பயிர் நன்கு வளர்வதுடன் அதிக மகசூல் கிடைக்கும். மேலும் மானாவாரியில் பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்யும்போது விதை விதைக்கும் கருவியை பயன்படுத்தி விதைப்பு செய்வதுடன் பயிர் எண்ணிக்கையை சரியாக பராமரிக்க வேண்டும். ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா போன்ற நுண்ணுயிர் உரங்களுடன் விதைநேர்த்தி செய்ய வேண்டும். ஏக்கருக்கு 50 கிலோ ஜிப்சம் அடியுரமிட வேண்டும். விதைத்த 30 மற்றும் 45வது நாட்களில் மழை பெய்து போதிய ஈரம் இருக்கும்போது 2 சதவீதம் டிஏபி உரக்கரைசல் தெளிக்க வேண்டும்.

**எம்.அகமது கபீர், தாராபுரம்-638 656.மொபைல்: 93607 48542.**

**களில் ஏற்படும் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த...**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,00:00 IST

பயறுவகைப் பயிர்கள், எள், வெண்டை, கொத்தமல்லி, பூசணி வகைப்பயிர்கள் சாகுபடியாளர்களின் கவனத்திற்கு....

உங்கள் பயிரின் இலைகளின் மேல்பகுதியில் சாம்பல் போன்ற வெள்ளை நிற தூள் படிந்திருக்கிறதா என்றும் அந்த இலையின் அடிப்பகுதி பச்சையம் இழந்து மஞ்சள் நிறமாக மாறியுள்ளதா என்றும் கவனியுங்கள். அப்படிக் காணப்பட்டால் உங்கள் பயிர் சாம்பல் நோயினால் பாதிக்கப் பட்டிருக்கலாம். சாம்பல் நோய் தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து நாம் தெரிந்துகொள்வது அவசியம்.

**நோய்க்கு உகந்த காலம்:** தற்போது நிலவும் காலை குளிர் மற்றும் பனி பெய்கின்ற சூழ்நிலை இந்த சாம்பல் நோய் பரவ ஏற்றதாகும். இது குறிப்பாக பயறு வகைப் பயிர்கள், எள், வெண்டை, பீன்ஸ், பூசணி வகைப்பயிர்களில் எளிதில் பரவும்.

**நோய் அறிகுறிகள்:** இந்நோய் பாதிக்கப்பட்ட பயிரின் இலைகளின் மேல்பகுதியில் சாம்பல் போன்ற வெள்ளை நிற தூள் படிந்திருக்கும். இலையின் அடிப்பகுதி பச்சையம் இழந்து மஞ்சள் நிறமுடையதாக இருக்கும். இந்நோய் தீவிரம் அடைந்தால் இலைகளின் கீழ்பகுதியிலும் சாம்பல் போன்ற வெள்ளை நிறம் படிந்திருக்கும். விரைவில் இந்த இலைகள் உதிர்ந்துவிடும்.

கட்டுப்படுத்த வழிமுறைகள்: இந்நோயைக் கட்டுப்படுத்த கார்பன்டசிம் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் வீதம் கலந்து கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும். இலைகளின் மேலும் கீழும் இம்மருந்து நனையும்படி தெளிக்க வேண்டும். நனையும் கந்தகம் எனில், ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு கிராம் வீதம் கலந்து பூசணிப்பயிர் தவிர மற்ற பயிர்களில் தெளிக்க வேண்டும். கந்தகம் பூசணி பயிரின் வளர்ச்சியை பாதிக்கக்கூடியது.

**டாக்டர் ந.முருகேசன்,பேராசிரியர் மற்றும் தலைவர்பருத்தி ஆராய்ச்சி நிலையம்,ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.**

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,00:00 IST



**திப்பிலி:** பொதுவாக மலைப்பிரதேசங்களில் பயிரிடப்படும் திப்பிலி பேச்சிப்பாறையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தின் முயற்சியால் சமவெளிப்பகுதியிலும் சக்கைப்போடு போடுகிறது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சாகுபடி செய்யலாம். இதற்கு நிழல் தேவை என்பதால் தனிப்பயிராக நடவு செய்ய முடியாது. வாழையைவிட தென்னைக்கு இடையில்தான் நன்றாக வளரும். 25 அடி இடைவெளியில் நல்ல நீர்வசதியுள்ள தென்னந் தோப்புகளில் திப்பிலியை நடவு செய்யலாம். இளவயது தென்னைகள் உள்ள தோட்டங்களிலும் நடலாம். இயற்கையில் கிடைக்கும் தொழு உரமே போதுமானது. ஒரு எக்டருக்கு 600 கிலோ வரை மகசூல் கிடைக்கும். அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள் வரை மகசூல் கொடுக்கும். அதற்கு பிறகு திப்பிலியின் வேரையும் விற்பனை செய்யலாம். ஒரு ஏக்கரிலிருந்து 2 டன் வேர் கிடைக்கும். கிலோ ரூ.20 என்று விலை வைத்து சித்த மருத்துவ நிறுவனங்கள் வாங்கிக் கொள்கின்றன. மேலும் விபரங்களுக்கு தங்கசெல்வபாய், இணை பேராசிரியர், வேளாண் அறிவியல் மையம், பேச்சிப்பாறை, 04651-281 759.

திப்பிலி சாகுபடியில் வெற்றி கண்ட விவசாயி சகாயதாஸ், 97516 68745. இவர் கன்னியாகுமரி மாவட்டம் குருந்தன்கோட்டிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கொருப்பைக்குழியில்

இரண்டரை ஏக்கர் தென்னையில் ஊடுபயிராக வாழை மற்றும் திப்பிலியை சாகுபடி செய்து வருகிறார்.

**(தகவல்: பசுமை விகடன், 25.5.11)**

அக்ரி கிளினிக் மற்றும் வேளாண் தொழில்மையம் துவங்க இலவச பயிற்சி அளிக்கும் நிறுவனம் தேசிய வேளாண் நிறுவனம்,சென்னை (மேனேஜ் - நிறுவனம் மற்றும் மத்திய வேளாண் அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனம்).
இரண்டுமாத உறைவிட பயிற்சி, உணவு மற்றும் தங்கும் வசதி இலவசம்.
தேசிய வேளாண் நிறுவனம், ஊரக மேம்பாட்டு மையம், இல்லீடு கிராமம், காஞ்சிபுரம்.
விவசாயம் மற்றும் பண்ணைத் தொழில்முனைவோரை உருவாக்குதல். அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தகுதி - ஐசிஏஆர்/யுஜிசி இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வேளாண் பட்ட, பட்டயப்படிப்பு (அ) உயிரியல் சார்ந்த முதுநிலை படிப்பு முதலியன.
பயிற்சிக்குப்பின் கடனாக தனி நபருக்கு அதிகபட்சம் ரூ.20 லட்சம் வரையிலும் 5 நபர் கொண்ட குழுவிற்கு ரூ.100 லட்சம் வரையிலும் வங்கி கடன் பெற்று தொழில் தொடங்கலாம். பிசி/எம்பிசி பிரிவினருக்கு கடன் தொகையில் 30 சதம்; எஸ்சி/எஸ்டி மற்றும் மகளிருக்கு 44 சதம் மானியம் அளிக்கப்படும்.
பயிற்சியில் சேர விரும்புவோர் ரூ.500க்கான காசோலையை மேனேஜ், ஐதராபாத் என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்காணும் முகவரிக்கு உரிய கல்விச் சான்றிதழ் நகலுடன் விண்ணப்பிக்கவும். "மைய அதிகாரி, தேசிய வேளாண் நிறுவனம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம், அண்ணா பல்கலைக்கழக தரமணி வளாகம், தரமணி,சென்னை-600 113. 044-2254 2598; 94452 01083.-**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**நடப்பாண்டு ஏப்ரல்-மே மாதங்களில் புண்ணாக்கு ஏற்றுமதி இரண்டு மடங்கு அதிகரிப்பு**

ஜூன் 08,2011,01:52



கோல்கட்டா:நடப்பு ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், நாட்டின் புண்ணாக்கு ஏற்றுமதி 8 லட்சத்து 21 ஆயிரத்து 763 டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதங்களில் மேற்கொள்ளப் பட்ட ஏற்றுமதியை விட, இரண்டு மடங்கு (3 லட்சத்து 77 ஆயிரத்து 950 டன்) அதிகமாகும் என, இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு மே மாதத்தில், இதன் ஏற்றுமதி, சென்ற ஆண்டின் இதே மே மாதத்தை விட, 84.48 சதவீதம் வளர்ச்சி கண்டு, அதாவது, 1 லட்சத்து 73 ஆயிரத்து 604 டன்னிலிருந்து, 3 லட்சத்து 20 ஆயிரத்து 266 டன்னாக அதிகரித்துள்ளது. நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவம்பர் - அக்டோபர்), உள்நாட்டில் எண்ணெய் வித்துகள் உற்பத்தி, சிறப்பான அளவில், இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, நவம்பர் முதல் மே மாதம் வரையிலான, ஏழு மாத காலத்தில், உள்நாட்டில் எண்ணெய் வித்துகள் உற்பத்தி, சென்ற ஆண்டின் இதே காலத்தை விட, அதாவது, 2.49 கோடி டன் என்ற அளவிலிருந்து, 3.03 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. எண்ணெய் வித்துகள் உற்பத்தி அதிகரித்து, சமையல் எண்ணெய் வகைகள் அதிகளவில் உற்பத்தியாகி உள்ளதையடுத்து, புண்ணாக்கு ஏற்றுமதியும் வளர்ச்சி கண்டுள்ளது.உலகளவில், புண்ணாக்கிற்கான தேவை அதிகரித்துள்ளது. இதற்கு, பன்னாட்டு சந்தையில் நல்ல விலையும் கிடைக்கின்றது. இது போன்றவற்றால், புண்ணாக்கு ஏற்றுமதி அதிகரித்து வருவதாக, எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. நடப்பாண்டு ஏப்ரல்-மே மாதங்களில், கன்ட்லா துறைமுகத்திலிருந்து, 4.05 லட்சம் டன் புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

மும்பை ஜவகர்லால் நேரு துறைமுகத்தி லிருந்து, 1.71 லட்சம் டன்னும், முந்த்ரா துறை முகத்திலிருந்து, 1.67 லட்சம் டன்னும், பேடி துறைமுகத்திலிருந்து, 52 ஆயிரத்து 155 டன்னும், விசாகப் பட்டி ணம் துறைமுகத்திலிருந்து, 17 ஆயிரத்து 100 டன்னும், கோல்கட்டா துறைமுகத்திலிருந்து, 70 ஆயிரத்து 202 டன்னும் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளது. நடப்பு 2011ம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், ஜப்பான் நாட்டுக்கான புண்ணாக்கு ஏற்றுமதி, சென்ற ஆண்டின் இதே மாதங்களை விட, 3 மடங்கு அதிகரித்துள்ளது. இவ்விரு மாதங்களில், ஜப்பானுக்கான புண்ணாக்கு ஏற்றுமதி 48 ஆயிரத்து 887 டன்னிலிருந்து, 2 .06 லட்சம் டன்னாக அதிரித்துள்ளது. இதில், சோயா புண்ணாக்கின் பங்களிப்பு, 2 லட்சம் டன்னாகவும், கடுகு புண்ணாக்கு ஏற்றுமதி 5,403 டன்னாகவும் இருந்தது.

வியட்நாம் நாட்டிற்கான புண்ணாக்கு ஏற்றுமதி, இதே மாதங்களில், 41 ஆயிரத்து 853 டன்னிலிருந்து, 1.10 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 95 ஆயிரத்து 76 டன்னாகவும், கடுகு புண்ணாக்கு 7,976 டன்னாகவும், தவிடு புண்ணாக்கு ஏற்றுமதி

7,020 டன்னாகவும் இருந்தது.இதே மாதங்களில், சீன நாடு, நம் நாட்டிலிருந்து 1.39 லட்சம் டன் கடலைப் புண் ணாக்கையும், 1,391 டன் சோயா புண்ணாக்கை யும் இறக்குமதி செய்து கொண்டுள்ளது.தென் கொரியாவிற்கு 1.11 லட்சம் டன்னும் (88 ஆயிரம் டன்), ஐரோப்பிய நாடுகளுக்கு, 43 ஆயிரத்து 774 டனும் (579 டன்) புண்ணாக்கு வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. புண்ணாக்கு, கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படுகிறது.

**கர்நாடகாவில் விளைச்சல் குறைவு அரை சதம் அடித்தது பீன்ஸ் விலை**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,01:54 IST

கோயம்பேடு : விளைச்சல் குறைவு எதிரொலியாக, பீன்ஸ் விலை வரலாறு காணாத அளவிற்கு சென்னையில் உயர்ந்துள்ளது. தமிழக உணவுகளில் சாம்பார் உள்ளிட்ட குழம்புகளிலும், பொறியல் செய்யவும் பீன்ஸ் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில்தான் பீன்ஸ் அதிகளவு விளைகிறது. அங்கு விளையும் பீன்ஸ் நாள்தோறும், 10க்கும் மேற்பட்ட லாரிகள் மூலம் கோயம்பேடு மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது கர்நாடகாவில் பீன்ஸ் விளைச்சல் குறைந்துள்ளது. புதிதாக பயிரிடப்பட்டுள்ள செடி மற்றும் கொடிகளில் பீன்ஸ் பிஞ்சு வளர துவங்கி உள்ளது.

இதனால், தட்டுப்பாடு அதிகரித்து, அதன் விலையும் மெல்ல உயர துவங்கியுள்ளது. கடந்தாண்டு இதே நாளில், கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ பீன்ஸ், 10 முதல் 15 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது ஒரு கிலோ பீன்ஸ், 45 முதல் 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இவற்றை வாங்கிச் செல்லும் சென்னையின் பல்வேறு மார்க்கெட் வியாபாரிகள், 10 ரூபாய் வரை அவற்றின் விலையை கூடுதலாக வைத்து விற்கின்றனர். கர்நாடகாவில் பீன்ஸ் விளைச்சல் அடுத்த மாதம் அதிகரிக்கும் என தெரிகிறது.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் நாளை சினைத்தங்காமை பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,03:02 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், நாளை (9ம் தேதி) கறவை மாடுகளில் சினைத்தங்காமை, அதற்கான தீர்வு குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர்

வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 9ம் தேதி, "கறவை மாடுகளில் சினைத்தங்காமையும் அதற்கான தீர்வுகளும்' என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது.

பயிற்சியில், சினைப்பருவ அறிகுறிகள், கனநீர் மாறுபாடுகள், நோய்க்கிருமி தாக்குதல், தீவன குறைபாட்டில் ஏற்படும் தற்காலிக மலட்டுத் தன்மை உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. அதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர் உட்பட அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம்.

விருப்பமுள்ள நபர்கள், நாமக்கல்- மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தில், நேரில் வந்தோ அல்லது, 04286-266345, 266244 ஆகிய எண்ணில் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குறுவை, சம்பா சாகுபடிக்கு சான்று பெற்ற விதை நெல் இருப்பு: வேளாண் உதவி இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,03:02 IST

மோகனூர்: "குறுவை மற்றும் முன் சம்பா சாகுபடிக்கு சான்று பெற்ற விதை நெல் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அதை விவசாயிகள் பெற்று பயன்பெறலாம்' என, மோகனூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் சுதா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: குறுவை பட்டம் மற்றும் முன் சம்பா சாகுபடிக்கு தற்போது காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. விவசாயிகள் நாற்றுவிடும் பணிக்கு தயாராகி வருகின்றனர். குறுவை பட்டத்துக்கு ஏற்ற ஏ.டி.ட் 39, மற்றும் சம்பா பட்டத்துக்கு ஏற்ற மேம்படுத்தப்பட்ட ஏள்ளை பொன்னி, ஏ.டி.ட் 45, ஐ.ஆர் 20, ஏ.எஸ்.டி 19 ஆகிய ரகங்களில் சான்று பெற்ற நெல் விதைகள் மோகனூர் வேளாண் விரிவாக்க மையத்தில் போதிய அளுவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் மோகனூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி சான்று பெற்ற நெல் விதைகளை பெற்று நெல் சாகுபடியை மேற்கொள்ளலாம். மேலும், விதையுடன் நேர்த்தி செய்திட போதுமான அளவு அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபேக்டீரியா உயிர் உரங்களும், நுண்ணூட்ட கலை உரங்களும் போதி அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் சான்று பெற்ற விதை, நுண்ணுயிர் மற்றும் நுண்சத்து கலவை ஆகியவற்றை பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று பயன்பெறலாம்.

**முள்ளங்கிக்கு கூடுதல் விலை: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,02:50 IST

தர்மபுரி: தர்மபுரி பகுதியில் உற்பத்தியாகும் முள்ளங்கிக்கு சென்னை, கோவை மார்க்கெட்டுகளில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு யூனியனில், 400 ஏக்கரில் முள்ளங்கி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சின்னமிட்டஅள்ளி, பெரிய மிட்டஅள்ளி கிராமங்களில், வேளாண்துறை அறிவுரைப்படி விளைபொருள் குழு அமைத்து, 150 ஏக்கரில் முள்ளங்கி சாகுபடி செய்துள்ளனர். வேளாண்மை துறை அறிவுறுத்தும் அறுவடைக்கு பின் தொழில்நுட்பம், சிப்பம் கட்டும் முறையில் முள்ளங்கி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இதனால், விவசாயிகளுக்கு நோய் தாக்குதல் இன்றி நல்ல மகசூல் கிடைக்கிறது.

சின்னமிட்டஅள்ளி, பெரியமிட்டஅள்ளி கிராமங்களில் இருந்து மட்டும் தினமும், 15 ஆயிரம் கிலோ முள்ளங்கி சென்னை, கோவை, தஞ்சாவூர், திருச்சி மற்றும் கும்பகோணம் ஆகிய மார்க்கெட்டுகளுக்கு அனுப்பப்படுகிறது. இது தவிர வியாபாரிகள் நேரடியாக விளைநிலங்களுக்கு வந்து கொள்முதல் செய்வதால், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கிறது. இதுகுறித்து மிட்டஅள்ளியை சேர்ந்த விவசாயி ராஜா கூறியதாவது: விளைபொருள் குழு அமைத்து சாகுபடி செய்வதற்கு முன், உள்ளூர் மற்றும் வெளியூர் மார்க்கெட்டுகளில் விலை நிலவரம் தெரியாமல், முள்ளங்கியை 2 ரூபாய்க்கும், 3 ரூபாய்க்கும் விற்று வந்தோம். இதனால், இடைத்தரகர்களாக செயல்படும் வியாபாரிகளுக்கு மட்டும் நல்ல லாபம் கிடைத்தது.

எங்களுக்கு செலவு செய்த பணத்தை எடுப்பதில், பெரும் சிரமம் ஏற்பட்டது. தற்போது, வேளாண்துறை அறிவுறுத்தியுள்ள விளைப்பொருள் குழு மூலம் வெளியூர் வியபாரிகளிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, வேளாண்துறை அறிவுறுத்தும் தொழில்நுட்பம் அடிப்படையில் முள்ளங்கி சாகுபடி செய்து விற்பனை செய்கிறோம். இதன் மூலம் காரிமங்கலம் முள்ளங்கிகளுக்கு, வெளியூர் மார்க்கெட்டில் நல்ல வரவேற்பு உள்ளது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட், கோவை மொத்த விற்பனை அங்காடி ஆகிய மார்க்கெட்டில், நாங்கள் தினமும் அனுப்பும் முள்ளங்கியை எதிர்பார்த்து விற்பனை நடக்கிறது. இதனால், நல்ல விலையும், வியாபாரிகளிடத்தில் மரியாதையும் கிடைக்கிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**உழவர் சந்தை விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,02:50 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட உழவர் சந்தை விவசாயிகளுக்கு, வேளாண்மை துறை சார்பில், குறுகிய கால காய்கறி சாகுபடி பயிற்சி நடந்தது. தர்மபுரி மாவட்டத்தில், கடந்த ஒரு மாதமாக பரவலாக மழை பெய்து வருகிறது. தென்மேற்கு பருவமழையும் துவங்கியுள்ளதால், குறுகிய காலத்தில் காய்கறி உற்பத்தி செய்வது குறித்து, மாவட்டம் முழுவதும் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளிலும் காய்கறி கொண்டு வரும் சுற்றுவட்டார கிராம விவசாயிகளுக்கு, குறுகிய கால காய்கறி சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மாவட்ட வேளாண்மை துறை துணை இயக்குனர் நாகராஜன் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் தாம்சன், துணை அலுவலர் இளங்கோ மற்றும் வேளாண் பணியாளர்கள் உழவர் சந்தைக்குட்பட்ட அதகப்பாடி, கடகத்தூர், செம்மாண்டகுப்பம், கிருஷ்ணாபுரம், செம்மனஅள்ளி உட்பட பல்வேறு கிராமங்களில் சென்று விவசாயிகளக்கு பருவ மழையை பயன்படுத்தி குறுகிய காலத்தில் சாகுபடி செய்து மகசூல் கிடைக்கும் காய்கறிகள் குறித்து உதவி அலுவலர்கள் பழனி, நரசிம்மன், ரங்கநாதன், காளியப்பன், சிவலிங்கம், நாகராஜ் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுமா?**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,02:36 IST

பொங்கலூர்:"மஞ்சள் விலை நாளுக்கு நாள் சரிந்து வருவதால், விவசாயிகளை நஷ்டத்தில் இருந்து பாதுகாக்க, அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும்,' என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் அதிகரித்துள்ளது. பொங்கலூர் பகுதியில் கடந்தாண்டு ஆயிரம் ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. அவை, தற்போது அறுவடை முடிந்து, பதப்படுத்தப்பட்டு விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன. கடந்தாண்டு குவிண்டால் 17,000 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது, ஒரு குவிண்டால் விலை 6,000 முதல் 7,000 வரையே விற்பனையாகிறது.

இது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு விலை குறைவு. விலை குறைவுக்கு கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களிலும், ஈரோடு, சேலம், கோவை உள்ளிட்ட மாவட்டங்களிலும் மஞ்சள் சாகுபடி பரப்பு அதிகரித்ததும், அடிக்கடி மாறும் அரசின் ஏற்றுமதி, இறக்குமதி கொள்கையும் ஒரு காரணம். மஞ்சள் சாகுபடி அதிக முதலீட்டுடன்

மேற்கொள்ளப்படுகிறது. ஓராண்டு பயிரான மஞ்சளை விவசாயிகள் மற்ற பயிர் களைக் காட்டிலும், அதிக அக்கறையுடன் கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகின்றனர். ஓராண்டு பாடுபட்டு அறுவடை செய்த மஞ்சள், குறைந்த விலைக்கு விற்பனையாவதால், பல விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.

பொருளாதார ரீதியாக விவசாயிகள் பின்தங்கியுள்ளதால், மஞ்சளை இருப்பு வைக்க இயலாத நிலை உள்ளது. சீசன் காலங்களில் விலை குறைவதும், சீசன் முடிந்ததும் விலை ஏறுவதும் தவிர்க்க முடியாததாக உள்ளது. இது, விவசாயிகளை பொருளாதார ரீதியாக பாதிக்கிறது. விவசாயிகள் மட்டுமின்றி கிராமப்புறப் பொருளாதாரமும் சேர்ந்தே பாதிப்புக் குள்ளாகிறது. விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலைக்கு வாங்கி இருப்பு வைத்து, விற்பனை செய்யும் வியாபாரிகள் மற்றும் இடைத்தரகர்கள் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர்.

விவசாயத்துக்கு தேவையான உரம், மருந்து மற்றும் ஆட்கள் கூலி போன்றவை அதிகரித்துள்ள நிலையில், மஞ்சள் விலை குறைந்துள்ளது விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், "ஏக்கருக்கு சராசரியாக 30 குவிண்டால் மகசூல் கிடைக்கும். நடவு முதல் அறுவடை வரை ஏக்கருக்கு ஒரு லட்ச ரூபாய் வரை செலவாகிறது.

இன்றைய மார்க்கெட் நிலவரத்துக்கு விற்பனை செய்தால், வாங்கிய கடனுக்கு வட்டி கூட கட்ட முடியாது. கொப்பரை விலை வீழ்ச்சியை தடுக்க, கொப்பரைக்கு விலை நிர்ணயம் செய்து, அரசு கொள்முதல் செய்வதைப் போல், மஞ்சளுக்கும் குறிப்பிட்ட விலையை நிர்ணயம் செய்து, அரசே கொள்முதல் செய்ய வேண்டும்; மஞ்சள் இருப்பு வைக்க தாலுகா வாரியாக கிடங்குகளை ஏற்படுத்தி, இருப்பு வைக்கும் மஞ்சளுக்கு, குறைந்த வட்டியில் அடமானக் கடன் வழங்கினால் மிகவும் உபயோகமாக இருக்கும்,' என்றனர்.

**மேட்டூரில் முன்கூட்டியே தண்ணீர் திறப்பு குறுவை சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,02:23 IST

தஞ்சாவூர்: மேட்டூரில் முன்கூட்டியே தண்ணீர் திறக்கப்பட்டதால் தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஹெக்டேர் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த காலங்களில் மேட்டூர் அணை குறிப்பிட்ட ஜூன் மாதங்களில் திறக்கப்பட்டதில்லை. அதனால் போர்வெல் உள்ள விவசாயிகள் மட்டும் குறுவை சாகுபடி செய்து வந்தனர். இந்தாண்டு வழக்கம்போல் ஜூன் 12ம் தேதி திறக்கப்படும் மேட்டூர் அணை,

முன்கூட்டியே ஜுன் 3ம் தேதியே திறக்கப்பட்டது. அணையில் போதுமான தண்ணீரும் இருப்பதால் டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவை சாகுபடி பணிகளை தீவிரமாக துவக்கியுள்ளனர். கல்லணை ஜுன் 9ம் தேதியே திறக்கப்படுவதால் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களுக்கு ஜுன் 11, 12 தேதிகளில் தண்ணீர் வந்து சேரும். மேட்டூர் அணை ஜுன் 3ம் தேதியே திறக்கப்படும் என முன்கூட்டியே அறிவிக்கப்பட்டதால், விவசாயிகள் முன்கூட்டியே விதை விட்டு நாற்றங்கால் தயார் செய்துள்ளனர்.

ஆற்றில் தண்ணீர் வந்ததும் நடவுப்பணியை மேற்கொள்ள தயார் நிலையில் உள்ளனர். அதனால் இந்தாண்டு குறுவை சாகுபடி இலக்கு கடந்தாண்டை விட அதிகரிக்கும். கடந்தாண்டு மேட்டூர் அணை தாமதமாக திறக்கப்பட்டதால் தஞ்சாவூர் மாவட்டத்தில் 22 ஆயிரத்து 852 ஹெக்டேர் குறுவை சாகுபடி செய்யப்பட்டது. தொடர்ந்து சம்பா ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 462 ஹெக்டேரும், தாளடி 18 ஆயிரத்து 408 ஹெக்டேரும் சாகுபடி செய்யப்பட்டன. இந்தாண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் 40 ஆயிரம் ஹெக்டேர் குறுவை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்கூட்டியே தண்ணீர் திறக்கப்பட்டிருப்பதால் சாகுபடி இலக்கு அதிகரிக்கும். திருவாரூர் மாவட்டத்தில் 38 ஆயிரம் ஹெக்டேரும், நாகை மாவட்டத்தில் 35 ஆயிரம் ஹெக்டேரும் என தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஹெக்டேர் குறுவை சாகுபடி செய்யப்படும் என வேளாண் அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் 40 ஆயிரம் ஹெக்டேர் குறுவை சாகுபடி செய்ய தேவையான விதை நெல், உரங்கள் இருப்பு உள்ளது. 476 டன் விதை, 10 ஆயிரத்து 720 டன் யூரியா இருப்பு உள்ளது.

நான்காயிரத்து 720 டன் டி.ஏ.பி., தேவை, ஆனால் நான்காயிரத்து 548 டன் இருப்பு உள்ளது. அதேபோல் பொட்டாஷ் தேவையான அளவு மூன்றாயிரத்து 727 டன, ஆனால் ஐந்தாயிரத்து 319 டன் பொட்டாஷ் கையிருப்பு உள்ளதாக வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர். மேட்டூர் அணை முன்கூட்டியே திறக்கப்பட்டுள்ளதால் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் கடந்த ஆண்டுகளை விட இந்தாண்டு குறுவை சாகுபடி பரப்பு அதிகரிக்கும்.

**விவசாயிகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,03:05 IST

கொட்டாம்பட்டி : கொட்டாம்பட்டியில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி நடந்தது. கொட்டாம்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட கேசம்பட்டி, கருங்காலக்குடி ஆகிய கிராமங்களில் நடைபெற்ற பயிற்சிக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சங்கரலிங்கம் தலைமை வகித்தார். நெல், நிலக்கடலை, பயறு சாகுபடி தொழில் நுட்பங்கள், வேளாண் கருவிகள் மானியத்திட்டங்கள் மற்றும் மா, கொய்யா, காய்கறிகள் சாகுபடி பற்றியும், தோட்டக்கலை மானியத்திட்டங்கள் மற்றும் விளை பொருட்களை சேமித்து சந்தைப் படுத்துதல் பற்றியும் பயிற்சி அளிக்கப்பட்டது. மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி பற்றிய செயல் விளக்கங்களை உதவி வேளாண்மை அலுவலர் பிரபு, பாஸ்கரன் ஆகியோர் செய்து காண்பித்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் செல்வபாண்டி, துணை அலுவலர் ஆதிஸ்வரன், உதவி பொறியாளர் கண்ணன், தோட்டக்கலை அலுவலர் செல்வராஜ், உதவி வேளாண்மை அலுவலர் சந்திரன் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினகரன்

**பொங்கலூரில் இருந்து சாம்பார் வெங்காயம் சிங்கப்பூர் ஏற்றுமதி**

பதிவு செய்த நாள் 6/8/2011 2:06:22 AM



பொங்கலூர் : பொங்கலூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து சாம்பார் வெங்காயம் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. திருப்பூர் மாவட்டம் பொங்கலூர் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களான காட்டூர், பெருந்தொழுவு, கொடுவாய், கள்ளிப்பாளையம், புத்தரச்சல், நொச்சிபாளையம், குள்ளம்பாளையம், கழுவேரிபாளை யம், கேத்தனூர் உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் சின்ன வெங்காயம் அதிகளவில் பயிரிட்டுள்ளனர். சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் அது பயிரிடப்படுகிறது.

கடந்த ஒரு மாதமாக அறுவடை நடந்து வருகிறது. உள்ளூர் மார்க்கெட்டுக்கு மட்டுமின்றி, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. குறிப்பாக சிங்கப்பூர், மலேசியாவுக்கு சென்னையில் இருந்து ஏசி கன்டெய்னர்களில் சாம்பார் வெங்காயம் அனுப்பப்படுகிறது. இதனால் நல்ல லாபம் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

விவசாயிகள் கூறுகையில், வெங்காயத்தை வாங்கும் வியாபாரிகள், அதை சுத்தப்படுத்தி, தரம் பிரித்து மண்டிகளில் சேமித்து மூட்டை கட்டுகின்றனர். உள்ளூர் மார்க்கெட்டுகள் மற்றும் உழவர் சந்தைகளுக்கு அனுப்புகின்றனர். சிங்கப்பூர், மலேசியாவுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். வெளிநாடுகளில் பொங்கலூர் பகுதி சாம்பார் வெங்காயத்துக்கு கிராக்கி இருப்பதால் எங்களுக்கும் கூடுதல் விலை கிடைக்கிறது. தற்போது கிலோ ரூ.25 வரை எங்களிடம் கொள்முதல் செய்கின்றனர் என்றனர்.

## மழையால் உப்பு உற்பத்தி பாதிப்பு

பதிவு செய்த நாள் 6/8/2011 2:06:03 AM



மரக்காணம்: மரக்காணத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு மழை பெய்ததால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதியில் உப்பு உற்பத்தி அதிகரித்ததால் அதன் விலையும் குறைந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு திடீரென இடியுடன் கூடிய பலத்த மழை மரக்காணம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பெய்தது. இதனால் 3500 ஏக்கர் பரப்பளவில் இருக்கும் உப்பளங்கள் பாதிக்கப்பட்டது. இதனால் உப்பு உற்பத்தியும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. மீண்டும் உப்பு உற்பத்தி துவங்க ஒரு வாரம் ஆகும் என உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். இதனால் உப்பு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

**மரம் அடமானம் வைத்து வங்கி கடன் பெறலாம்**

பதிவு செய்த நாள் 6/8/2011 2:07:00 AM



காந்திநகர் : இயற்கையின் சொத்தான மரங்களை பாதுகாக்கும் வகையில் சிறந்த மரத்தை வளர்ப்பவர்கள் அதை உத்தரவாதமாக காட்டி வங்கியில் கடன் பெறும் வசதி குஜராத்தில் தொடங்கப்பட்டுள்ளது. குஜராத்தின் பழங்குடி மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள இந்த வசதி பற்றி மாநில வனத் துறை முதன்மை செயலர் நந்தா கூறியதாவது:
மலை வாழ் மக்கள், பழங்குடியினருக்கு வங்கி கடன் பெற உத்தரவாதம் அளிக்கும் அளவுக்கு சொத்து ஏதும் இருப்பதில்லை. மாறாக, அவர்களால் சுற்றுச்சூழல், இயற்கை வளங்களை பாதுகாக்கும் மரங்களை வளர்க்க முடியும். எனவே, அவர்களுக்கென பசுமை கடன் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சிறந்த மரங்களை வளர்த்து, அவற்றை உத்தரவாதமாக காட்டி வங்கியில் கடன் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்படும் கடனுக்கு மிகக் குறைந்த வட்டியாக 4 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்பட்டது. நிலம் இல்லா விட்டாலும் விலையுயர்ந்த மரங்களை சொந்தமாக கொண்டவர்கள் அவற்றின் மதிப்பு அடிப்படையில் கடன் பெற முடியும்.
முதல்கட்டமாக டாங்க் மாவட்டத்தின் பழங்குடியின மக்களுக்கு இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அதற்கு கிடைக்கும் வரவேற்பை பொருத்து, குஜராத்தின் மற்ற மாவட்டங்களுக்கும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்படும். அதன்மூலம், பழங்குடியின மக்கள் தங்கள் தேவைக்கு கடன் பெற முடிவதுடன், இயற்கை வளமும் அதிகரிக்கும் என்றார்.